**தலைப்பு 233–அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றின் படி திணைக்களத்தின் நிதியல்லா சொத்துக்களின் கீழ் போக்குவரத்து உபகரணங்களின் பெறுமானம் 2021.12.31 இல் உள்ளவாறான ரூபா 18,654,796 என பதியப்பட்டிருந்தாலும் திணைக்களத்தினால் கொம்றோலர் ஜெனராலிடம் அனுப்பியிருந்த வாகனங்கள் பற்றிய விபரங்களின் படி திணைக்களத்திற்கு சொந்தமான 24 மோட்டார் வாகனங்களின் பெறுமானம் ரூபா 109,406,795 என குறிக்கப்பட்டிருந்தது. அதன்படி நிதி நிலைமைக் | 2021.12.31 இல் உள்ளவாறான நிதியல்லா சொத்துக்களின் கீழ் போக்குவரத்து உபகரணங்களின் பெறுமானம் ரூபா 18,654,796 ஆகும். இது 06 மோட்டார் வாகனங்களின் பெறுமானம் ஆகும். ரூபா 90,752,000 பெறுமானமுள்ள 20 வாகனங்களின் பெறுமானம் தற்போது திணைக்களத்தின் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கிலிடப்பட்டுள்ளது. 01 வாகனத்தினை இன்னும் கையேற்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தினை நிதிக்கூற்றுக்களில் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மீதியினையில் சரியாக சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூற்றில் நிதியல்லா சொத்துக்களின் பெறுமானம் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான நிதியல்லா சொத்துக்களின் பெறுமானத்திற்கு இடையில் ரூபா 90,751,999 ஆன வேறுபாடு அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | | |

## 2. நீதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீடு பெற்றுத் தரப்பட்டிருந்த 17 ஒட்டுமொத்த மீண்டெழும் செலவின விடயங்களில், 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்திற்கு பெற்றுத் தரப்பட்ட ரூபா 14,050,000 ஒதுக்கீடுகள் வேறு 06 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டு இருந்தமையினால் நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பூரணப்படுத்தும் விதத்தில் செயற்பட்டு கொண்டு தத்ரூபமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டில்லாமையினை கணக்காய்வின் போது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக சில செலவினங்கள் நடவாது போனதும், அதிக காலம் திணைக்களம் மூடப்பட்டிருந்தமையினால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் கொவிட் தொற்று நிலைமை காரணமாக புதிதாக சில செலவினங்கள் உருவாகியமையினால் ஒதுக்கீடுகளில் ஒரு பகுதியினை மாற்றிக் கொள்வதற்கு நேர்ந்தது. | சிக்கனத்தன்மை மற்றும் விளைத்திறனின்மை பற்றி கவனம் செலுத்தப்பட்டு உய்த்துணர்ந்து செய்யக்கூடிய சகல சேவைகளையும் உட்புகுத்தப்பட்டு தத்ரூபமாகவும் சரியானதுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) முரணாக 04 செலவின | நிதிப் பிரமாணம் 94(2) அமைய | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் |

| | | |
|---|---|---|
| விடயங்கள் தொடர்பாக ஏற்படுத்தியிருந்த ஒதுக்கீடு தொகையினை விஞ்சி ரூபா 2,502,591 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | இவ்விணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. | செயற்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக வழிகாட்டல் 3.4 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் III கீழான இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றினை திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புக்கள் தொடர்பில் வெளியிடப்படும் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றினையுடன் (SA92) இணக்கம் காணப்பட்டு இருக்க வேண்டிய போதிலும், திணைக்கள நிதிக்கூற்றுக்களில் குறிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கும் பொறுப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 11,552,941 வினால் இணக்கம் காணப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு போதாமையினால் 94(2) படி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் Cigasகணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உட்படுத்த முடியாமையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

### 2.3 இணக்கம்பெறா கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ACA5 படிவத்தின் மூலம் முன்வைக்கப்பட்டிருந்த முற்பணக | திணைக்கள கட்டுப்பாடு கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதிகளின் படி இவ்வாறான | கடன் மீதிகளுக்கிடையில் நிலவும் |

| | | |
|---|---|---|
| கணக்கு தொடர்பாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக திறைசேரி ஏடுகளின் படி அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி மற்றும் திணைக்கள ஏடுகளின் படி அம்மீதியினைக்கு இடையே ரூபா 20,660 வேறுபாடு இருந்தது. | வேறுபாடு காணப்படாத போதிலும் தற்போதைக்கு கணக்குகளை கண்டுபிடிக்கக் கூடிய மிகப் பழைமையான வருடமான 1996 ஆம் ஆண்டிற்கும் முன்னிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 20,659.68 ஆன வேறுபாட்டினை இனங்காண்பது நடைமுறைப்படி செய்வதற்கு இயலாது உள்ளதால் அரச கணக்குகள் திணைக்களத்தில் உள்ள தகவல்களை எங்களது திணைக்கள தகவல்களுடன் பரீட்சித்ததன் பின்னர் மீதிகளினை திருத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வேறுபாடுகளினை தேடிக்கண்டு படித்து தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.4 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவைகளுடன் இணங்காமை

கீழ் காணும் சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைஅவதானிக்கப்பட்டது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| i | நிதிப்பிரமாணம் 104(அ) | 53,179 | மீளாய்வாண்டினுள் நேர்ந்துள்ள 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிருக்க வில்லை. | இந்த 03 வாகன விபத்துக்களும் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(அ) படி சம்பந்தப்பட்ட பரீட்சையினை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ii | நிதிப்பிரமாணம் 135 | - | உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறல், விலகுதல், கடமைக்கு வராத திகதிகள் போன்ற சந்தர்ப்பங்களில் நிதி அதிகாரத்தினை கையளிக்கப்படும் விதம் இற்றைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள ஏற்பாடுகள் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை . | நிதிப்பிரமாணம் 135 கீழ் வருடாந்த செலவினம் தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்பட்டு அட்டவணையொன் று தயாரிக்கப்படும். உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வில் செல்லும் போது, வேறு விசேட சந்தர்ப்பங்களில் விடுமுறையில் செல்லும் போது போன்ற சந்தர்ப்பங்களில் வேறொரு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவதனா ல் மற்றும் கடமையினை ஈடு செய்வதன் பொருட்டு பதில் கடமை புரியும் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவதால் அவ்வாறான அட்டவணையினைப் பேணும் தேவைப்பாடு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| iii | நிதிப்பிரமாணம் 1645(அ) | - | எரிபொருள் பரீட்சிப்பு மாதாந்த சுருக்கம், மோட்டார் வாகன திருத்த வேலை, டயர் மற்றும் பெற்றரி இடுதல் மற்றும் திடீர் வாகன விபத்துக்கள் அடங்கிய வாகன லொக் குறிப:பு புத்தகம் ஆகியன பேணப்பட்டிருக்க வில்லை. | மேற்படி தகவல்கள் குறிப்பிட்டு நிதிப் பிரமாணம் 1645(அ) அமைய வாகன லொக் குறிப்பு புத்தகத்தினை பேணுவதனை ஆரம்பிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | திணைக்களத்திற்கு சொந்தமான 16 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரீட்சிப்பினை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான சகல வாகனங்களினதும் எரிபொருள் எரிதலுக்கான பரீட்சிப்பினை 2021 வருடத்திற்காக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.<br><br>அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் எரிபொருள் எரிதல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். | அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் எரிபொருள் எரிதல் பரீட்சிப்பு மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2.5 சம்பந்தப்பட்ட அலுவல் உபகட்டுநிதி

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆவது பந்தியின் பிரகாரம் விசேட அலுவலுக்காக பதவிசார் தரத்திலுள்ள அதிகாரிகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் உபகட்டுநிதியினை சம்பந்தப்பட்ட அலுவலினை முடிக்கப்பட்டதும் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 05 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணத்தினை மீளச் செலுத்துவதற்கு 15 நாள் முதல் 82 நாட்கள் வரையிலான காலம் கழிந்து இருந்தது. | நிருவாகப் பிரிவினர் உதவி முகாமைத்துவ அதிகாரி, பராமரிப்பு விடயம் சார் அதிகாரியாக கடமையாற்றியமையால் மற்றும் அவசர கடமை சார் தேவையின் பொருட்டு அவருக்கு இந்த முற்பணத்தினை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.<br>நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உழைப்பினை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த முற்பணத்தினை மீளச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணம் மீள செலுத்துதலினை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் பாதுகாப்பு கெமரா முறைமையினை (CCTV) ஒரு வருடத்திற்கு மேலாக பழுதுபார்த்து சேவைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாது இருந்தமையினால் 2022 பெப்ரவரி 23 ஆந் திகதியாகும் போது முறையாக இயங்கவில்லை. LP வாயு ஒழுக்க திறந்த சைகை முறைமையின் பழுதுபார்ப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லாமையினால் இரண்டு வருட காலத்திற்கு முன்பிருந்தே உடன்படிக்கையின் படி பழுதுபார்ப்பு சேவைகளினை மேற்கொள்ளாது இருந்தது. அதேபோன்று திணைக்களத்தின் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் வாயு கசிவினை ஏற்படுவதாயும் அந்நிலைமையினை இனங்காணக்கூடிய கருவிகளும் செயலிழந்து இருந்தன. இரசாயன பொருட்களுள்ள களஞ்சிய சாலை, சாதாரண களஞ்சியசாலை, மின்னறை மற்றும் வாயுவாங்கின் இயக்கத்தினை மேம்படுத்தும் முறைமையினை சார்ந்த பழுதுபார்ப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை மற்றும் CTஆய்வகத்தில்காற்றுச் சீராக்கி இயந்திரங்களுக்கான பழுதுபார்ப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை 2021 வருடம் ஆகஸ்ட் மாதம் முடிவடைந்து இருந்த போதிலும் | சம்பந்தப்பட்ட பராமரிப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு சேவைகள் முறையாக நடாத்தி செல்வதற்கு தேவையான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நீதிமன்றப் பதிவுகள், நீதிமன்ற வழக்குகள் சார்ந்த பொருட்கள் ஆராய்ச்சிக் கூடங்கள் மற்றும் பெறுமதிமிக்க இயந்திர சாதன உபகரணங்களுக்கு பாதுகாப்பினையும் முன்னுரிமையும் அளிக்கப்பட்டு காலத்திற்கு காலம் உடன்படிக்கைகள் மேற்கொண்டு பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2022 பெப்ரவரி 23 ஆந் திகதியாகிய கணக்காய்வுத் திகதி வரையிலும் பழுதுபார்ப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு சார்ந்த உடன்படிக்கையினை கைச்சாத்திட்டு பழுதுபார்த்தல் சேவைகளுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் இலங்கையிலுள்ள ஒரே நீதிமன்ற விஞ்ஞான ஆய்வுகூடம் அதிலுள்ள வழக்குகள் சார்ந்த பொருட்கள், ஆய்வுகூடப் பதிவுகள் மற்றும் ஊர்ஜீதம் செய்யப்பட்ட வழக்குகள் சார்ந்த பதிவுகள் பாதுகாப்பற்ற நிலைமக்கு தள்ளப்பட்டுள்ளன.

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் வழக்குகள் தொடர்பாக நிபுணத்துவ பதிவுகளை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கோரப்பட்டிருந்த பதிவுகளில் 14,673 ஐ 2020 திசெம்பர் 31 இல் பெற்றுக் கொடுக்க முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் 29,273 பதிவுகள் நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டினுள் நீதிமன்றத்திடம் 36,328 பதிவுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 7,618 பதிகள் அல்லது நூற்றுக்கு 17 பெற்றுக் கொடுக்க முடியாது போயிருந்தது. | 2021 வருட ஆரம்பதிதின் போது அதுவரை குவிந்திருந்த பபதிவிடப்படாத வழக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் மேற்பட்ட அளவில் வருடத்தினுள் பதிவினை வழங்கப்பட்டுள்ளதுடன் பதிவினை வழங்கப்படாத எண்ணிக்கை நேரொத்த மிகவும் கீழ் மட்டம் வரைக்கும் குறைக்கப்பட்டுள்ளது. | வருடாந்த வழக்குகள் அதிகரிக்கும் சாய்வினைக்கு நேரொத்த பதிவுகள் வழங்குவதில் ஒரு ஒழுங்கு முறையினை இனங்கண்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2006 இல் 4(2)(2) பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் சந்தர்ப்பத்தினை முதல் கொண்டு அதனை முடிக்கப்படும் வரையிலான ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டினைக்கான விபரங்கள் அடங்கும் வகையிலான பெறுகை திட்டமொன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 வருடம் முதல் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை திட்டத்தினை விபரமாக முன்வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை திட்டத்தினை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 அரச அதிகாரிகளின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரசநிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக நிதிப்பிரமாணம் 315(1) மற்றும் 880 இன் பிரகாரம் அரச அதிகாரிகளின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பிணை வைக்கப்பட வேண்டிய அதிகாரிகளிடமிருந்து பிணையினை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் பிணை அட்டவணையும் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைப்பினைக்கும் மற்றும் பிணை அட்டவணையினை பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4. உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்ட மூலத்தின் 40(1) பிரிவின் ஏற்பாடுகளின் படி அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் 2021 வருடத்திற்காக உள்ளக கணக்காய்வொன்றினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக 2021.11.19 திகதி முதல் செயற்படும் படியான நிதியமைச்சின் கணக்காளர் ஒருவர் பதில் கடமைபுரியும் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். | கணக்காய்வு சட்ட மூலத்தின் படி உள்ளக கணக்காய்வு அலகொன்றினை அமைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 வருடத்திற்காக உள்ளக கணக்காய்வு அமைப்பொன்றினை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இணைத்திருக்காமையின் காரணமாக உள்ளக கணக்காய்வு திட்ட அமைப்பொன்று நிருவப்பட்டிருக்கவில்லை. 2022 வருடத்திற்காக சம்பந்தப்பட்ட உள்ளக கணக்காய்வு அமைப்பினை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வினை க்காக உள்ளக கணக்காய்வு திட்டமொன்றினை செயற்படுத்த வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாமில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்திலான 32 வெற்றிடங்கள் நிலவியதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 24 சதமாகும். | அரச பகுப்பாய்வாளர் பதவிக்காக அமைச்சரவை அங்கீகாரத்துடன் முழுநேர கடமைக்காக அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலதிக பகுப்பாய்வாளர் பதவிகள் நிரந்தர அடிப்படையிலும், பதில் பகுப்பாய்வாளர் பதவிகள் 02 மற்றும் சந்தேகத்திற்குரியதுமான அரசின் பரிசோதகர் பதவிகள் பதில் | நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் முக்கியமான காரணங்களினை பயன்தரும் வகையில் நிறைவேற்றுதன் பொருட்டு சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் தொடர்பாக பணிக் குழுாமினைக்கு ஆட்சேர்ப்பது முதற்காரியமாக |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது இருந்தமை திணைக்களத்தின் செயலாற்றலினைக்கு நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | கடமையாற்றும் அடிப்படையிலும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தற்போது நிரப்பப்பட்டுள்ளன. சாரதிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. முகாமைத்துவ சேவைகள் அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் தொடர்பாக பொதுநிருவாக உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. | கருதி செயற்பட வேண்டும். |
| (ஆ) | அரச பிரிவினுள் மனித வளங்களினை அபிவிருத்தி செய்வது எனும் தலைப்பிற்கான 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிருவாக சுற்றுநிருபத்தின் இணைப்பு 01, 02 மற்றும் சுற்று நிருபத்தின் 6.1 மற்றும் 6.5பந்திகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் மீளாய்வாண்டில் திணைக்களத்தினுள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தேவையான விடயங்களினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றுநிருபத்தின் படி மனித வளங்களினை அபிவிருத்தி செய்வதற்கு தேவைப்படும் திட்டத்தினை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் தொடர்பாக நாளாந்தம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய விஞ்ஞானகூட பதிவுகள் பெற்றுக் கொடுக்க முடிாயத இருக்கையில், சிரேஷ்ட மட்டத்திலான அதிகாரிகளின் பணிக்குழாமில் நூற்றுக்கு 36 வெற்றிடங்கள் 2019 | பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | அரசுக்கு அறவிடப்பட வேண்டி தொகையினை தாமதமின்றி பிணையாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறாக இருக்கும் போது மற்றும் விஞ்ஞான ரீதியிலான சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அதேபோன்று சகல அதிகாரிகளும் சாதாரண கடமை நேரத்தை விட மேலதிக நேரத்தினை விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும் சூழ்நிலையில் அதிகாரிகள் கடமைகளினை ஈடுசெய்வதற்காக வேலைத்திட்டமொன்றினை வகுக்கப்பட்டுள்ளதாக அத்தாட்சி செய்யப்பட்டு 02 அதிகாரிகளை சம்பளமற்ற 03 வருட மற்றும் 05 ருட வெளிநாட்டு சேவைக்காக 2016.12.01 மற்றும் 2017.12.30 திகதிகளில் விடுமுறை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ் அதிகாரிகள் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் மீண்டும் கடமைக்கு அறிவிக்கப்படாததுடன் அரசுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,724,506 தொகையினையும் உடன்படிக்கை பிரகாரம் அறவிடப்பட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | திணைக்களத்தின் பெண் அதிகாரியொருவர் பின்பட்டப்படிப்பு கற்கைக்காக 2019.09.16 ஆந் திகதி முதல் வெளிநாடு செல்வதற்காக விடுமுறை பெற்று கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 23 | பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அரசுக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

வரையிலும் திரும்ப வராமையினால் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த தொகையினை மற்றும் அவ் அதிகாரிக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களின் கூட்டுத் தொகையான ரூபா 9,270,726 மற்றும் மடிக்கணினி உட்பட அரச சொத்துக்களுக்கு இழப்பீடு செய்யப்பட்டிருந்தும், தாபனக் கோவை XV அத்தியாயத்தின் 4.12 பிரிவின் பிரகாரம் கைச்சாத்திடப்பட்டிருந்த பிணை முறிக்கு அமைய சம்பந்தப்பட்ட பிணையாளரிடமிருந்தாவது அத்தொகையினை அறவிடுவதற்கு ஒரு வருட காலம் கழிந்திருக்கும் நிலையிலும் கூட அது தொடர்பாக இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.